
உ
சிவமயம்



இறைவனடி சேர்ந்த அமரர்

திரு. குலத்துங்கசுந்தரம் குமாரசிங்கம்

அவர்களின்

# நினைவு மலர்

**In memory of the late**

**Mr. Kulathungasundharam Kumarasingham**

**17.01.1999**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

தோற்றம்

01
.
02
.
1934



மறைவு

18
.
12
.
1998

இறைவனடி சேர்ந்த அமரர்

# திரு. குலத்துங்கசுந்தரம் குமாரசிங்கம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்

தெய்வத்துள் வைக்கப் படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு. குலத்துங்கசுந்தரம் குமாரசிங்கம்

யாழ்நகரில் வண்ணார்பண்ணையின் நீர்வாவியடிபதியில் தெல்லிப்பழை திரு. வீரசிங்கம் குலத்துங்கசுந்தரம் அவர்களுக்கும் வண்ணார்பண்ணை திரு. சுப்பிரமணியம் முத்துத்தம்பி மகள் இரத்தினம்மாவிற்கும் மூத்த புதல்வனாக திரு. குமாரசிங்கம் 1934ம் ஆண்டில் மாசித்திங்கள் முதலாம் நாள் பிறந்தார்.

இவருக்கு இரு மூத்த சகோதரிகளும் ஐந்து இளைய சகோதரிகளும் இரு இளைய சகோதரன்களும் உளர். அவர்கள் முறையே நாகேஸ்வரி நடராஜா, புவனேஸ்வரி கதிர்காமதாசன், பத்மாவதி சேனாதிராசா, திலகவதி குமரேசன், டாக்டர் பாலசிங்கம், முத்துக்குமாரசாமி, சீதாதேவி பத்மேஸ்வரன், கமலாதேவி நாகேந்திரா, அமிர்தாம்பிகை குமாரசிங்கம்.

இவர் தனது கல்வியை யாழ் இந்துக்கல்லூரியிலும் பின் கொழும்பு றோயல்கல்லூரியிலும் கற்று தனது உயர்தர பாடசாலை தராதரப்பத்திர பரீட்சையில் (HSC) 1954 சித்தி அடைந்தார். 1956ம் ஆண்டு தொழில் நுட்பகல்லூரியில் சேர்ந்து வரைபட தொழில்நுட்பவியல் கல்வி பயின்று சான்றிதழ் பெற்றார்.

இவர் 1957ம் வருடம் அரச நீர்ப்பாசன திணைக்களத்தின் (Irrigation Dept.) தலைமைக் காரியாலயத்தில் படவரைஞராக (Draughtsman) நியமனம் பெற்றார். இவர் கொழும்பில் இருமுறையும் புத்தளம், வவுனியா, யாழ்ப்பாணக்கிளைக் காரியாலயங்களிலும் பணியாற்றினார். பின் 1981ம் ஆண்டு யாழ்ப்பாணக் கிளையிலிருந்து ஒய்வு பெற்றார்.

இவர் 1972ம் ஆண்டு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை இராஜேந்திரம் சந்திரமதி தம்பதிகளின் மூத்த புதல்வி கமலாதேவியை திருமணம் செய்து தனது இல்லற வாழ்க்கையை தொடங்கினார். இதன் பேறாக இவர்கள் முறையே குலத்துங்கன், முகுந்தன், ஜெயசீலன் ஆகிய மூன்று புதல்வர்களைப் பெற்றெடுத்தனர். மூத்த புதல்வர் ஹட்டன் நஷனல் வங்கி - திருகோணமலைக்கிளையில் பணியாற்றுகின்றார். இரண்டாவது மகன் கணக்காளர் கல்விப்படிப்பை மேற்கொண்டிருக்கின்றார். மூன்றாவது மகன் கணனி கல்வி கற்கிறார்.

அன்னார் 18.12.98 அன்று இறைவனடி எய்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கின வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

## திருவாசகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வோனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
  உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
  சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்தா னந்தக் கனியே
  அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
  தொண்டனேன் விளம்புமா விளம்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின்னும் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன்
அடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிழையோனே கதிர்காமப் பெருமானே!

## திருமூலர் திருமந்திரம்

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாவரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாவரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே

*The ignorant say that love and Siva are two*
*But none does know that love alone is Siva,*
*When men but know that Love and Siva are the same*
*Love is Siva, they ever remained.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Acknowledgement

We the family members of the late Mr. K. Kumarasingham sincerely thank and express our gratitude to the Manager and the staff of the Hatton National Bank, Trincomalee, relatives, friends and all those who called over at our residence, attended the funeral, sent floral tributes, messages of condolence and assisted us in numerous ways during our bereavement.

***Wife: Kamaladevi***

***Children: Kulathungan***
***Mukunthan***
***Jayaseelan***

**32, Allen Avenue,**
**Dehiwala.**

# நன்றி நவிலல்

எமது பாசமிகு கணவர் / தந்தை சிவபதம் அடைந்த செய்தியறிந்து நேரில் ஆறுதல் கூறிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் எல்லோருக்கும் குறிப்பாக திருகோணமலை அட்டன் நஷனல் வங்கிக்கிளை முகாமையாளருக்கும், அக்கிளை வங்கி உத்தியோகத்தர் எல்லோருக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், தொலை பேசிமூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், எங்கள் துன்பத்தில் பங்கு கொண்ட அனை வருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மேலும் சபிண்டிகரண அந்தியேட்டிக்கிரியைகளில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி.

*இங்ஙனம்*
*மனைவி: கமலாதேவி*
*பிள்ளைகள்: குலத்துங்கன்,*
*முகுந்தன்,*
*ஜெயசீலன்*

32, அலன் அவென்யூ,
தெகிவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Forward Graphics Tel : 555935
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org